சாயத்திரியைவிட்டேன் சாமிபோல்-தூயமணி
தூவுகிரைவையையிலோர் சோமனையறத்தேன்முன்
காவிரியிற்போட்ட கலக்கம்போல்-தீவமாய்ப்
போனேனரண்மனையிற் பொற்கொடியாள்சொற்படியோர்
மானுளையழைத்து வாருமென்று-மீனாட்சி
யாபிவீட்டிற்சமைய லாச்சுதுபோவென்றாள்நாக்
போயிருந்துசாப்பிட்டேன் போசனத்தற்-காய்கறிகள்
இன்னதெனவறியே னின்னரசமென்றறியேன்
கன்னிமேல்வைத்த கவனத்தால்-என்னுடைய
கையிரமாறுமுன்னே காதலியைவந்தணைந்து
சையோகவைபோக சம்போக-மெய்போகம்
ஆகச்சுகித்தே னகப்பட்டேன்பாய்மரத்திற்
காகத்தையொத்தே னென்காதல்-மோகவலைப்

தாய்க்கிழவிமருந்துகூட்டத் தொடங்கினமைகூறல்.

பூட்டிக்குளானேனைப் போழ்வாய்க்கிழைமருந்துக்
குட்டிக்குளேயடக்கக் கோப்பிட்டாள்-காட்டு

வனமூலிகை சேர்த்தமைகூறல்.

மருந்துவகைகாவடக்கிவந்தமடக்கி
கருந்துவரைபாடவரைகஞ்சம-பெருந்தும்பை
ஆகலைமேற்புல்லுருவி யாவரைமேல்புல்லுருவி
மாதளைமேற்புல்லுருவவல்லாமை-தூதுவளை
பேய்ப்பீர்க்குபேய்முசுட்டை பேசிவட்டிபேய்ப்புடலை
காய்ப்பாகளாயுருவி நாய்வேளைநாய்க்கோட்டான்
புன்னைப்பூவன்னிப்பூ பூளைப்பூதாழைப்பூ
முன்னைப்பூமாம்பூ முருக்கம்பூபூசினிப்பூ
பூலாவேர்சங்கம்வேர் புங்கம்வேர்தவளைவேர்
வேலாவேர்செட்டிவேர் வெட்டிவேர்பலாவேர்
அத்திக்காய்தித்திக்கா யல்லிக்காய்நெல்லிக்காய்
கத்திரிக்காய்பேச்சுரக்காய் காஞ்சிரங்காய்-மத்தக்காய்
நின்றசிணுங்கி நிலம்புரண்டியாவின்கீழ்
கன்றுமணமுறிஞ்சி காஞ்சோறிகுன்றியிலை
பின்றொடரிமுன்றொடரி பெண்டொடரியாண்டொடரி
பொன்றொடரிவைவாய்ப் புலிதொடரிஇன்றல்

பூனைவணங்கி பழுகண்ணிதொழுதகண்ணி
ஆனைவணங்கி புளிமடலை-வானு
தலைசுருளிநன்னாரி தான்றிவெள்ளைத்தோன்றி
மலைகலக்கிதேள்கொடுக்கு வாகையிலைசுருநா
மத்தக்காய்பிஞ்சு தமரத்தம்பூப்பிஞ்சுமூலை
நத்தைச்சுரிக்கொழுந்து நாட்டகத்திசிற்றகத்தி
தோதகத்திபட்டாரைத் தோதகத்திபஞ்சமா
பாதகத்திற்சூரியனைப் பாம்பணையும்போதிற்

கடைசரக்கு சேர்த்தமைகூறல்.

கருத்துவகையாய்த்தேடிக் கட்டிகடையில்
மருந்துவகைகஸ்தூரிமஞ்சள் அரைசித்திர
மூலஞ்செவிட்டாதி மூலங்கடையினிற்கக்
கோலக்கரம்பூலக்குரோசாணி ஏலம்வெண்
காராஞ்சீனக்காரங் காரப்பூசாரபரி
தாரவசாரஞ் சவுக்காரம்காரீயம்
துந்தந்துரிசு அருசாவசப்படுத்தும்
கொத்தமல்லிவாய்விளக்கங் குங்குமப்பூமுத்தக்கா
செட்டிப்பணிவிடை யிந்துப்புவெட்டியாணவுப்புக்
கட்டுப்புவீட்டிற் கறியுப்புமட்டிப்பால்
இஞ்சிலவங்கமிதன் பத்திரிசிங்கத்தோர்
கஞ்சியிலேபோடு கசகசாமஞ்சள்

அதிமதுரபாசைய திமதுரமாக்கும்
சதகுப்பிசாதிக்காய் சாபசதிரி அதிவிடயம்
பாக்குச்சிறுதேக்கும் பாஷாணம் மயிலைப் பாம்புன்
னைத்தகிறுவிஷமுள்ள கிரிப்புன்னைக்குப்பச்சை
காவியவினிமுக ஹைமுழுதாது மலைப்
பாவிசவதரித்துப் பாரிலுள்ள சிவர

பிராணிகளினுறுப்புகள் சேர்ந்தமைகூறல்.

மருந்துவகைசெவ்வாமை வானரந்தன்பிச்சு
பருந்துநகமுதலைப் பல்லுருந்தாக்
கிரியமாவட்டை செவ்வட்டை பெட்டை
நரிமுதுகுத்தோலுடும்பு நாய்க்குருகு
முனைவாய்நருஞ்சேவக மூன்றுவெள்ளைப்பல்லி
சினைவலிபாண்டைச் சிறகுப்பனையடியிற்
குன்றுகணைவாகை மேற்கூகைகீழ்வாயலகு
செந்நாய்ப்பவனிவாய்த் தேவாங்குக்கூகணம்
வலிபாணைமுகத்து மணிக்காடைமுட்டை
வெளிமூளை நதிப்பிறைச்சிபுல்மீசை
வல்லூற்றுவல்லெலும்பு மாட்டுப்புருவிளைச்சம்
கல்லூரிசகொப்ப சவரிமயிரல்லவாம்
பிறாலையிற் றெருமையிளங்கொடிசெம்
பூரதுயற்புழுக்கை புன்றிமேற்கரைக்கால்
தூக்கணங்குஞ்சு கூழல்வண்டுநண்டுகரும்
காக்கைகிணைக்காரக் கருமூலைப்பால்நாக்குப்
பழுப்பூனைபீசபொன்னிப்புவாரின்
தொழூபபுப்பெருச்சாளி குட்டிபழுததமா
வவ்வாற்றலைகுகிலை மாவினுரைகாடிச்
சவ்வுகிழவாமைமரஞ் சங்கிலுன்றவயிரத்தம்
கன்னிபூதியாதபிள்ளை காதிற்சிறுகுறும்பி
தன்னையடியாள் தலையிற்பேன் சின்னவட்டை
வாற்குருவைசக்தெலும்பு வானையடிக்குடலுள்
ளுக்குருவிக்கொக்கரைநன் னாருகருமேற்குக்
காட்டோரிதொண்டை காட்டேரந்திமண்டை
வாட்டோரிதேடி வகையாய்விறந்து

மருந்து கூட்டமைகூறல்.

வனமருந்தெல்லாந்தயிலம் வாங்கிக்கடையிற்
கனமருந்தெல்லாம்போய்க் கரும்புகனிலவடித்தே
சாற்றிலரைத்துத் தசைபூசித்தாழியிலே
யூற்றியசாராயத்தி லூறவைத்துச்சோற்றுப்பிற்
செப்பிப்புத்தகத்தமைத்த திங்களிலெல்லாமருந்தும்
தம்பியிலேயிட்டகளக்குளிர்செய்மைதரும்

நாக்கிலழுக்குங்கத் தழுக்குப் பாண்டிமன்
மூககில்வெயர்வும்விட்டு மூன்றுநாள் தாய்க்கிழவி

ஔஷதப்பிரயோகஞ்செய்தமைகூறல்.

ஐமபோலரைத்துருட்டி மங்கைநலம் பிரதவுண்டை
தப்பாதெனக்கொடுத்தாள சர்ப்பனையாள் அப்பளத்தில்

மதிமயக்கமிருந்தமைகூறல்.

இட்டாள் பழத்திலே யிட்டாள்சுண்ணாம்பிலே
இட்டாள்மதிமயக்க மெய்தினேன் -விட்டிருக்கக்
கூடாதுகண் ணுறங்கக் கொள்ளாது சாப்பாட்டைத்
தேடாது பேருமனஞ் செல்லாது பேடையாள்
போககமுத்திரத்தில் மூழ்குவதல்லாது தவர்
வாசுநதியையுமறந்துவிட்டேன்-மேகஞ்செய்
சித்தசன் மந்திரகலைகள் தேர்ந்ததுவேதல்லாது
நித்தியசெபமந்திரத்தை நீக்கினேன் தத்துவரிக்
கன்னிசெய்யுபவாடிக்குக் கால்பிடிப்பதல்லாது
புண்ணியநமஸ்காரங்கள் போட்டுவிட்டேன்-பெண்ணணங்கின்
செங்களபக்கொங்கை தெரிசனமல்லாது சிவ
லிங்கதெரிசனத்தை நீங்கினேன்-அங்கசவேள்
மாபூசை செய்வோனாயவளை வாயமிர்தமுண்டதல்லால்
தேபூசைமேற்கவனந் தீர்த்துவிட்டேனகோபமுற்ற

வஞ்சிக்கவுபாயஞ்செய்தமைகூறல்.

நாட்டமறிந்தென்னை நரைக்கிழவி வெல்லவொரு
பூட்டகந்தான்பேசினாள் பேர்பெற்ற தாஷ்டிகரே
ஆடித்திருநாளழகருக்கின்றுகுதந்த
வேடிக்கைபார்க்க வெகுசனங்கள்கூடியே
செல்லுகிறார்நீங்களும்போய் கண்ணுதோகல்வியீர்
நல்லபலனெங்களுக்கு நண்ணுதோகலவியீர்
என்றுளவ்வார்த்தைத் திருந்தாலறிவியாம்
சென்றுலுமாகைமேற் றேடாமல்என்றுசெருந்
தேனேமதனுபி ஷேகமேநீவருவை
யானுற்திருநாட் பழகென்றேன்காணுமும்மைக்

திருவிழாவுக்குசென்றமைகூறல்.

காணுதிருந்தாலென் கண்ணுறங்குமோவென்று
பூணாமுலையாள் புறப்பட்டாள் பாணிப்பாய்
பித்தனையினுவுடைமை பெண்ணுக்குப்பூட்டிவா
மத்தைதொடர்ந்தாளடிப்பிறகே பத்தும்பேர்
பாங்கியருமின்றிவரும் பாவையுடன்சென்றழகர்
ஓங்குமலைத்தீர்த்த முவந்தாடிபூங்குழலாய்

மானுக்கலையுரை மந்திரியும்போலேயிறங்கத்
தேனும்பூந்துளபச் செங்கண்மால்-தானேறும்
தேருக்குபின்னாகச் சென்றேனோர்பாணவிசைத்
தூரத்தேஞானியையன் தோன்றினான்
பக்கத்திலேயொதுங்கிப் பாய்ந்தேனொருப்புலத்தோர்
தக்கமறையோன்மனையிற் றங்கினேன்-கக்கற்றில்
தூக்கிட்டதோகைச் சுறையுமடிதனிலே
பாக்கிட்டகைவாளப் பையுமாத்தாய்க்கிழவி
மாதைத்தொடர்ந்துவர மங்கையெனப்பின்றொடரப்
பாதைவழிகொண்டேன் பரிசடனேபந்தை

திரும்பிவருகையில்மோசஞ்செய்தமைகூறல்.

அரைநாழிக்கப்பா லாந்தைகுறுதி
வரைமாலைமுலையாய் மறந்தேன்சரிகையிட்ட
சேலையொன்றோடித் திரும்புகிறேனில்லுமென்று
வாலிபப்பெண்மேலென் மனங்கிடக்கக்காலிற்
கடுமையுள வாட்டமெல்லாங் காட்டினேன்னென்பின்
குடுமியிலேதட்டக் குதிக்காலிடுதியிற்போய்
மீளுமுன்னமங்கையிட்ட வேற்றுடைமையைக்கழட்டி
பிளைகள்ளுங்கண்ணி பிழைத்தோடி ஆளுடனே
போனாள்மதுரைக்குப் போய்த்துகிலைதானெடுத்து
மானைத்தேடி வரும்வேளைதேனனையாள்
ஊரின்முருங்கை உருவியதோல்போலநின்றாள்
மாரியெனக்கண்ணீர் வழித்தோடக்காரிகையே
என்னென்றேன்விம்மி யேக்கம்போமூக்குளறி
முன்னின்றுமெள்ள மொழியலுற்றாள் அன்னை
வருவார்நம்மையர் வழியிற்பழியார்
திருநாட்சனத்துடனே செல்வோம் அறிவையே
வாவென்றாள்விட்டு வரமாட்டேனென்பயத்தாற்
போவென்றேன்கோபமாய்ப் போயினாள்கூவென்றாற்
கௌவியுண்டோவந்தான் கிழவனொருவனையா
வாய்வாழ்நரைத்தலைவன் பூண்கண்டுநீண்ட
தடிக்கொப்புமாரன் றனிவழியிலென்னை
அடித்துப்பறித்தா னகன்றான்-திடுக்கிட்டேன்
என்றாளைத்தோற்றுமதற் கென்னமோவுனதிஷ்டம்
ஒன்றுமேலக்ஷ்முடையாமனின்று
வருந்தாதேயென்று மதுரைக்குவந்து
திருந்திழையாள்வீட்டில் சென்றேமருந்துருட்டி.

அங்கேவந்தாள்மகளை யாவலாய்ப்பார்த்துடைமை
எங்கேயென்றாள்பரிபோச் சென்றுரைத்தாள்-செங்கை

தாய்க்கிழவிபோய்ப் புலம்பல்கூறல்.

நெறித்தாள்பதறி நெறித்தகைவிட்டு
பரித்தாள்வயிற்றைப் பிசைந்தாள் ஒருத்தருமில்
லாதவிடத்துடைமைக் காசையாயுன் னுயிரைச்
சேதப்படுத்திலென்ன செய்வோமால்-பேதை
மகளேயெனக்கதறி வாய்விட்டழுது
வெருவாய்பரதவித்துவிம்மி-நகைகளெல்லாம்
போச்சுதேகோவிலுக்கு போயிலாத்தடையென்
றாச்சுதேயூருமறிந்ததே யேசசொன்று
வந்துதேபண்ணி வறித்துபடக்காசுபணம்
இந்துதேகண்டேனுன் றேட்டைநாள்-வந்தடித்துக்

கள்ளர்பறித்த நகைக்குவருமோவுடைமை
உள்ளதெல்லாம்ரத்ந வுடைமையே-அள்ளிஅள்ளி
எண்ணிவிட்டசெம்பொ னிருநூறுநான்கொடுத்துப்
பண்ணிவிட்டகாப்பும் பரிபோச்சேபுண்ணியவான்
இக்கடையவெற்றிகொண்ட சிந்தகூனேந்த்ரனிட
கைக்கடகம்போலுமினிக் காண்பேனோ
தண்டசரப்பணிதுரை சாமிநாயகன்கொடுத்த
கண்டசரமேனிகட்குக் காட்டினேன்-அண்டலரை
வெட்டிவாள்வீரன் விருபாட்சியான்கொடுத்த
ஒட்டியாணம்போல வுண்டாமோசிட்டர்புகழ்
ஆணிக்கனகிரி யப்புராயன்கொடுத்த
மாணிக்கமாலைப்போல் வாய்க்குமோவாணர்புகழ்
அம்மைராயன்கொடுத்த வாணிமுத்துதாழ்வடத்தைக்
கொம்மைமுலையாட்கேன் கொடுத்தேனாஎம்முடைய
வல்லக்கொண்டையனருள் வச்ரக்கணையாழிக்
கல்லுக்கொருவர்விலை காண்பாரோவல்லிசெய்த
இன்னரிபாட்டுக்குங் கெடிக்காமையான்கொடுத்த
பொன்னரைஞாண்போற்கிடைக்கப் போகுதோகுச்சிலியார்

கெங்காசிராவளித்த கெம்பிழைத்தமோதிரம்போல்
இங்கார்கொடுப்பார்சொல் லேந்திழையே-மங்கைபுரி
காட்டியத்தைக்கண்டுமெச்சி நத்தத்துலிங்கேந்ரன்
போட்டகொலுசெண்ணூறு பொன்பெறுமேவாட்டமில்லா
கோகனகவதனன் கோபாலராயனருள்
மோகனப்பொன்மாலை முற்றுமேபோகத்
திருமலைக்கண்டமன்னன் றந்தருள்சிறந்தகாக்கை
இருமுலையாட்கேன்கழுத்தி லிட்டேன்கருணைநிதி

பூசாரயனிட்டபொற்சவரி போல்வருமோர்
ஆசாரிபண்ணை யறியானோநகமெல்லாம்
போடிமகிபன்கொடுத்த பொற்சட்டிகட்டிவிட்டு
போடியென்றேயென்னமதி போயினளென் தாடகையை
அம்பிற்பொருராமபத்ரா திரையன்றுதந்த
தும்பிப்பதக்கனிலை சொற்பமோ-சொர்ப்புயெறும்
நாடகத்தைநக்கண்டு மெச்சும்நம்முர்க்கையன்கால்
பாடகத்தைநக்கண்டாற் பரிபாமே-நாடிபுகழ்
கொட்டாரயன்கொடுத்த கோரிவச்ரவோலையைப்போற்
பட்டையறைனாலுமிலை பண்ணுவதோ-வெட்டுகின்ற
வாளூளவுஞ்செங்கன் மட்டக்காதநீர்ட்டுக்காறையந்த
சனுவன்வீட்டி விருக்குதெதாளவட்டம்
பூணூர்முலைபாட்டும் போட்டவெள்ளிதண்டையெந்தச்
சாணுவளவிற்போய்ச் சார்ந்ததோவீணையெண்
மானுனைகொள்ளைகொண்டோன் வச்ரமுருகையெந்தக்
கோனுறக்கையிற் கொடுத்தானோ-ஆனையும்
மூவைக்காண்பாட்டிகண்ட மூக்குத்திக்குக்கையென்ன
பூவென்றெறங்கேயறிந்த போட்டானோ-பாவைநல்லாய்
என்னமோநாமினிமே லென்றாள்கிழவியையும்
கன்னிகையுந்தேற்றி கணக்கேற்றி-அந்நேரம்

அணிசெய்திட்டமைகூறல்.

ஐயாயிரம்பொன் னவல்போலப்பார்வையிட்டு
கையாரத்தட்டான் கைவிட்டுச்செய்த
உடமையெல்லாமந்த வுருப்படியேவிட்டு
வடிவையெல்லாம்பார்த்து மகிழ்ந்தேன்கொடியுடைய
மஞ்சத்திற்கூடி மகிழ்ந்திருக்கும்போதொருநாள்
பஞ்சொத்தகூந்தலவள் பையவந்தியே
கோயிலுக்குப்போவென்றாள் கோடியில்லையெல்லாம்
சாயமில்லையென்று சலிப்பவளுண்டேயே
பிறந்தவூருக்குப் பிடவைபோமணம்
மறித்தவரேயல்லாமற் றூர்காண்கதங்குழலாய்
பொன்னின் குடத்துக்குப் பொட்டிடவேலைபோவென்றாள்
அந்நேரமாதையழைத்துப்போய்நன்னிசெட்டி

ஆடைவாங்கிகொடுத்தமைகூறல்.

கட்டுவர்க்கச்சேலை கடையிலிடைக்கிசைந்த
பட்டுவர்க்கம்பார்த்து பளபளப்பாமட்டுவர்க்கப்
பாவாடையிட்டமொழிப பாவைக்குப்பொன்ரவிக்கை
பாவாடைவாக்கம் பதினாறுமேவியிரு

கொப்புவானமாய்த்தீர்ந்த கொப்புவர்னம்-இப்புவியில்
ஆதிவான போது மழகுடையாளுக்கிசைந்த
வீதிவர்னச்சேலையொன்று விந்தையாய்-மாதுமத
பாணத்தார்கூந்தற் பவளவாய்ப்பைந்தொடிக்கு
வாணத்தாற்சேலை வகைமூன்று-வேணிமணி
முத்துவர்னமுகநல்லாள் மூலைக்குள்வைத்துடுக்க
முத்துவர்னச்சேலையிலே மூன்றுவகை-வைத்திருநீ
ஆரணவர்னத்திலவ கட்டிநுதலாட்கிசைந்த
நாரணவர்னச்சேலை நாலைந்து-போரிற்
படைமுறிச்சுகுத்தியகைப் பாவையாள்கட்ட
உடைமுறிச்சுக்குத்தியிலே யொன்று-தொடையல்
சொருகுமணிக்குழலாள் சோடிணையாக்கட்ட
அருகுமணிச்சேலையிலே யஞ்சி-பிரிவுகொண்டு
சொல்லாச்சேலைப்பெருங்கட் சேயிழையாள்கட்டநல்ல
சல்லாச்சேலைத்தரமாய்த் தானிரண்டு-மெல்ல ௭௨௰

வாளெழுந்தோளவரை மாலழுத்திவாளுடுக்க
ஆளெழுந்துச்சேலையிலே யாறேழு-நீளெழிற்சேர்
சுந்தரத்தோண்மங்கைக்குத் தொட்டிமுத்துக்கட்டநல்ல
சந்திரகாந்தக்கச்சு தானணிந்து-அந்தரத்தில்
இந்திரகாவிற்குலவ ரம்பையனையாட்கிசையச்
சந்திரகாவிச்சேலை தானிரண்டு-சிந்துமழை
மாரிக்கொடிமின் மருங்கிற்கிணங்கியகல்
தூரிக்கொடிச்சேலை சோடிரண்டு-காரிகைக்கு
காங்குசரிகைசேலை கம்பாவரித்துகில்பட்டை
டாங்குகம்பிச்சேலை பலவர்னம்-நாங்குசிலம்
பெச்சரிகைபென்னிடைக் குச்சதிபிதென்றற்
குச்சரிகைவர்க்கமெல்லாங் கொண்டந்தேன்-உச்சியமாய்த
தாய்க்கிழவிகேட்டாள் தனக்கிரண்டுசேலையந்தப்
பேய்க்குதவாவிட்டால் பிழைப்பேது-பாக்களந்த

பலவகைக்கடன் தீர்த்தமைக்கூறல்.

வள்ளியென்றும்பாளனந்த மாரியென்றுசெய்யனந்த
சின்னியென்றுநெல்லளந்த செல்வியென்றும்-எந்நேரம்
வைவதுவும்போவதுவும் வாசலிலேநின்றலம்பல்
செய்வதுவும்போவிட்டாள் தித்திரிப்புக்கைமேலா
அந்தக்கடன்காரர்க் கன்றேநானம்பதுபொன்
இந்தக்கடன்காரிக் கீய்ந்துவிட்டேன்-அந்திசந்தி ௭௩௰
தாய்குடிக்கப்பெண்குடிக்கச் சாராயமுற்றிவெறிப்
பேய்பிடிக்கவிட்டப் பிச்சிவந்து-நியாயமோ

தப்பறைக்காரியென்று சண்டைக்குவாய்திறந்தாள்
மூப்பதுபொன்போட்டுவாய் மூடிவிட்டேன்-செப்பமுலை

செப்பகபூசைக்கு கொடுத்ததைமகூறல்.

மங்கைவயிற்றை வடிக்குதென்றுமார்க்கமிட்டாள்
அங்கைகொட்டக்காலதிக மாகுதென்றாள்-எங்கள்
குலதெய்வம்பாணுதிருத்த கோட்டாலையென்றாள்
கலைதுலைந்துசோர்வதையுங் கண்டாள்-சிறுநுதலாய்
தெய்வக்குறைக்கென்ன செய்யவேணுஞ்சொல்லென்றேன்
கையிலறிவாருங் கட்டளையாச்-செய்த
உருவேணும்பொற்குச் சுருமாலைவேணும்
இருகாலுக்குச்சிலம்பு மீணுப்-பரவைகளும்
செஞ்சேவலும்வேணுஞ் சேவிக்கும்பம்பைகொர்
அஞ்சாறுபொன்வேணு மாடிவரக்-குஞ்சமிட்டிப்
பூங்சப்பரையெடுத்துப் பூசையிடவேணுமென்றாள்
ஆங்கப்படிக்கிந்தே னைம்பதுபொன் தாலைகநந்தன்

தங்கைவிருப்பைவைத்திருக்கத்தொடுத்தைமகூறல்.

வாளைதாதுங்காது மாதுநல்லாய்நான்கேட்ட
வேளைதாவென்றவுடன் வீட்டிலே-ஆழாக்கு
முத்துவைத்துவைத்தேன் முடிப்பாவோராயிரம்பொன்
வைத்துவைத்தேன்பின்னுமொரு மாணிக்கப்பெட்டிரக்காற்

பின்னும்பல்விதத்தால்வஞ்சித்துப்பொருள்கவர்ந்தைமகூறல்.

கட்டியென்றுங்கட்டினின்மேற் கட்டிசகலாத்தென்றும்
வட்டியென்றுஞ்சீப்பு வகையென்றுங்கட்டுமொட்டாங்
குத்துவிளக்கென்றுங் குடப்பாதெருவையென்றும்
பத்துபேரென்றும் பதக்கமென்றும்பெட்டையென்றும்
மச்சுவீடென்றும் மனைக்கதிர்க்கள்ளென்றுமங்கை
மெச்சிவிளையாடிருக்க மேடையொன்றும்கச்சுறுக்கும்
கொங்கைச்சியிழ்மாது கூடப்பிறந்தசின்ன
தங்கக்சிகால்களுக்குத் தண்டையொன்றும்-இங்கிதமாய்
ஆடவிட்டகட்டுவனுர்க் கங்கியென்றுஞ் சங்கீதம்
பாடவிட்டபாடகர்க்குப் பகையொன்றும்தேடியர்க்குக்
கம்பிகுறிச்சேலையென்றுங் காதோலையென்றும்வெள்ளித்
தம்பிக்கையென்றுந் தலையென்றும்செம்பொனென்றும்
தந்தசிமிழ் சவாதென்றுமாண்டியப்பன்
கந்தபொடியென்றுங் கதம்பமென்றும்-சந்தனங்கள்
என்றுமடிக்கழுகிற கேற்றதென்றுங்கைத்தபொங்கற்
கென்றுஞ்சிவராத் திரிக்கென்றும்-இன்று
தலைநடவிழுலை தலையுரஞ்சவார்பொற்
பலவிதமாயோசிப் பசப்பிக்கலவையணி

வாங்குமிளமுலையா ளுணிருக்கவேவுயிரை
வாங்குவதுவோர்பொருளை வாங்கிவிட்டாள்-சோங்கிவிட்டுக் ௭௫௰
கட்டிசெம்பொன்னைக் கடலிற்கவிழ்த்ததுபோல்
ஒட்டொழியத்தோற்றுவிட்டே னுள்ளதெல்லாம்-இட்ட
மருந்தாலிருளு மருளுங்கொண்டார்போல்
இருந்தேன்கொடுக்க வகையின்றி-உரித்த

சிற்றுவெருங்கையனுனமைகூறல்.

கலைவிற்றேன் காதிற் கடுக்கனையும்விற்றேன்
மெலிவுற்றேன் தாய்க்கிழவி வீட்டுசெலவுக்குத்
தந்திரமாய்கேட்டாள் தலைகவிழ்ந்தான் றிரும்பி
குந்துவதைக்கண்டாள் குறிப்பறிந்தாள்-அந்தியென்னைத்
தாரைவிட்டவேல்விழியாள் தாக்கிழவிவார்த்தையைக்கேட்
டோரைவிட்டுப்போக வுபாயமிட்டாள்-நேரவெறும்

துரத்தவகைதேடினமைகூறல்.

மின்புறங்காட்டிச்சயனமேற்படுத்தாளென்புரத்திற்
பின்புறங்காட்டிப் படுப்பாள்பேசாமல்-அன்புடனும்
செய்யாவுபசாரஞ் செய்யப்போனுலுமுழங்
கையாலிடிப்பாள் கடுகடுப்பாய்-பையாவே
அன்னைவந்துதன்னை யழைக்கச்செறுமுடிந்த
தன்னையறிந்தென்னைவிட்டுத் தானேகிப்-பொன்முடிப்பு
வாங்குவதுங்கூடுவதும்வந்தென்னருகிற்படுத்துத்
தூங்குவதுமாகத் தொழிலெடுத்தாள்-பாங்கிவரிற்

மதனபிஷேகம் தன்னையேசினமைகூறல்.

கோப்புடையமாயக் குருவிடை விட்டுப்பழய
மாப்பிள்ளைமார்தம்மை வரச்சொல்லிப்-பேய்ப்படுவாய்
அந்நியராய்வந்தா லருகிற்போய்காணிருந்தாற்
சன்னைதெரியாதே சவுக்கலே-என்னடா
போடாவெளியிற் புறமண்டபத்திருந்து
வாடாவெனச்சொல்லுவாள் மட்டுமிஞ்சி-ஓடியங்கள்
சொல்லதொடுத்தாள் தூரத்திடினும்பூட்டியசெக்
கெல்லைவிட்டுப்போகா வெருவானேன்கெல்ல

தாய்மகளை யேசினமைகூறல்.

மகளையழைத்து மருந்தூட்டிசொல்வாள்
றகல்பாசிப்பாப்பாய் சதமோ-முகமாயம்
என்னசெய்தாய்நீயவனுக் கேற்றவுடப்படிக்கை
என்னசொன்னுய்பார்த்தவருக் கேர்குமோ-பின்னே
கொடுத்தமட்டும்வாங்கிக் கொடாதிருந்தால்விட்டு
முடுக்கவல்லோவேசி முறைமை-கடுப்பார்கைப்
பிள்ளையோநீயுமென்ன பேய்ப்பிள்ளாமாப்பிளைமார்
கள்ளரைப்போல்திரியக் காரணமேன்-மெள்ளமெள்ள

ஓடங்கடக்கவிட்ட வோடக்காரன்றலையிற்
போடுவதுகோட்டென்பார் பூதலத்தோர்-வாடி
சிலைநுதலாய்நானுனக்குச் சேர்ந்தமருந்துக்கு
மலையுகைர்ந்துவருமே-முலைவிற்றைத்
தொட்டதோகன்னஞ் சுரிகதோபூத்தநரை
விட்டதோமேனி யிளைத்ததே தொட்டவளை
விட்டுப்பிரிந்தாக்கால் வேறுபிழைப்பிலையோ
முஷ்டிவாங்கிப்பயலே மோப்பாச்சு-கெட்டிகெட்டி
வரைவிடப்பற்றென்றே றார்தாரிவீட்டிறப்புக்
கூரையிலொண்டிக்கேட்டுக் கொண்டேனுன்-மேனைதப்பி

சண்டையிட்டமை கூறல்.

நன்றிமந்தாரை நடுக்கேட்குமோதெய்வம்
என்றுசொல்லிவந்தே னெதிரேநான்-என்றவுடன்
ஆங்காரமிட்டாளென் னாஸ்தியெல்லாந்தனைையால்
வாங்காமல்வாங்கிவிட்ட மாமியார்-ஆங்குவரும்
பேய்மடையார்பெண்ணும் பெருங்குளத்துநீரைத்தன்
வாய்மடையாலேயுறுஞ்சு மாமியார்-ஈயாரைப்
புலவாவைக்கண்ட புலிபோலப்போய்பிடிக்கும்
வல்வாக்கிழகெட்டை மாமியார்-புல்லுவிழுங்
கோப்புளதன்மூப்பை கொடுதின்னை வாங்கமொட்டை
மாப்பிளைமாரைத்தேடு மாமியார்-சேப்பைக்கும்
பிஞ்சுமரங்காய்க்கும் பிளவுக்கும்வெற்றிலைக்கும்
மஞ்சளுக்குஞ்சஞ்சரிக்கு மாமியார்-மஞ்சத்தே
தேற்றிதலைமுன்பு சேர்ந்தபணக்காரமுறை
மாற்றிமகளுக்கிணங்கு மாமியார்-போற்றிவைத்த
காசழியாமற்றிரியுங் காவிரிப்பற்காரரைத்தான
வாசல்மிதிக்கவொட்டாமாமியார்-ஆசைகொண்டு

சேவிழையைச்சேர்ந்தவரைத் தேற்றிக்கழுத்தறுக்கும்
ஆயுதம்போலுங்கருநாக் கத்தையார்-மேயவொரு
செம்பிலேதண்ணீருஞ் சிலைப்பாயுங்கொடுபோய்
அம்பலத்திலேபடுக்கை மத்தையார்-வெம்புலிபோல்
தாஷ்டிகரையும்பிடித்துத் தாகத்திலம்மாவென்
அட்டிபணம்பறிக்கு மத்தையார்மோட்டுப்
பகலிப்பாட்டைப்போலே புறப்பட்டாளன்று
பொலிப்பாட்டுப்பாடப் புகுந்தாள்வலுத்தவர்போல்
என்னசொன்னாய்பார்ப்பாநீ பின்னமொருவார்த்தைசொல்லு
கன்னத்திலேயறைவர் கண்ணேசின்னஞ்
சிறிக்கியுனக்குநானுய் சிக்கினளோநான்
கிருக்குப்பிடித்த கிழவி-உறக்கி

வசமாக்கவல்லோவமைசெய்தாய்வைப்பு
விசமாச்சோருல்லாவி நீயே-பசிவேளைக்
கேதுகொடுத்தாய்நீ பித்தனைகாலந்திரிந்தால்
போறுமினிபோவென்றுநீ போகாயோமாதுனக்கு
தாய்மாமன்பிள்ளையோ தாலிகட்டி தந்தேனோ
நீமாத்திரமாங்கு நேசமோ-மாமிகிட்டத்
தந்தபணஞ்சேதமுண்டோ சாண்வயிற்றுபிச்சைக்கு
வந்தவனும்பெண்ணுக்கு மாப்பிள்ளையோசொந்தமாக ௭௯௰)

கிட்டக்கிடந்து கிடைப்பாளோதேவடியாள்
இட்டொருவனைசேர்வ தெத்தனைநாள்குட்டிணியுன்
வாணாளைவாங்கிடுவேன் வாயைமூடினைவயிறு
சாணோமுழமோ சவுக்கலே-காணமற்ற
மூடாவிதேது முழக்கம்வெளியிலே
வாடாவொருகால மதிகேடாளுடலாம்
என்றுபுடவை யிழுக்கினாள்நாணவளைத்
தின்றுவிடத்தக்க சினமானேனன்றியற்ற
பாவிநீகேளாய் பழங்கதைசெந்தீயிடைபட்
டாவிருடும்பாம்பையெடுத் தாதரிக்கத்தாவி
ளன்காரத்திற்றீண்டியது நன்மைசெய்யக்கர்மம்
விளைந்தகதையென்னளவு மெய்யே-உளம்பதறிப்
பேசலாமேநீ புறம்விடலாமோ அடுக்காய்
ஏசலாமேகொடுத்த இல்லையே-ரகசியமென்
செட்டிகளுக்கெல்லாந் தெரியாதோகான்கொடுத்த
கட்டிவராகன் கணக்குண்டோ-தட்டார்
அறியாரோவூர ரறியாரோவுன்னெஞ்
சறியாதோதோஷ மலவோ-மறுபடியுன்
கிட்டவைத்தவெண்முடிப்போ கேளாய்கிழப்பிணமே
எட்டுத்தலைமுறைமட் டிங்குண்டோகெட்டபுத்திக்
கந்தலேயென்றேன் சவட்டினுழையடா
சந்தையின்மானங்கெட்டாய் சரசம்போ-முன்றன்
வளவிற்சிலவுடமை வைத்துவைத்தேனென்றாய்
களவாய்ப்பயலே கண்ணே-கிளரட்டோ
பின்றுசைவேண்டாம் புறப்பட்டுபோவென்றாள்
அந்நேரமோர்வடுக னாயுதம்-கன்னப்
பரிசையுந்தன்காலிலே பாப்பாசிபோட்டுப்
பெரியபட்டிகாமமுந்தன் பின்னே-ஒருவனுமாய்
கக்கத்தில்வானிவிடுக் காச்சிமூச்சென்றுவந்தான்
பக்கத்திலேசவிசை பாராட்டிவெட்கமறத்

தாடாதகூத்தெல்லா மாடியேயம்பலத்தில்
வாடாவென்றன்னை வெருட்டுதோய்ப்பாடி
மடியைப்பிடித்தாள் மயிரைப்பிடித்தேன
தொடையிலடிப்பட்டதவள் தோற்பை மடிநழுவித்
தொங்கிபறைவாலென்று தூங்கிச்சுருட்டியெடுத்
தங்கையினூக்கத் தடக்கினேன்-மங்கைதனைத்
தள்ளினனஞ்சாறு தாக்கினேன்பொக்கைவாய்க்
குள்ளிப்பிடித்தாள் குடுமியையுள்ளூரார்

சபையேறினமை கூறல்.

கூடிவிலக்கிவிட்டார் கூகூவென்றம்பலத்தில்
ஓடினாள்நானு முடன்சென்றேன் தாடகைபோற்
போயப்பொழுதே புதுமண்டபத்திலத்தக்
கோயிற்றலத்தாரைக் கூட்டமிட்டாள்வாய்விட்
டழுதாள்மகனை யருகேநிறுத்தித்
தொழுதாள்மடைமாறிச் சொல்லுவாள்-பழியஞ்சிப்

கிழவி அறிவிப்புக்கூறல்.

பட்டரேதேவேந்த்ர பட்டரேமீனாட்சி
பட்டரேசாட்சி பட்டரே-இஷ்டநர
சிங்கையரேநாரணைய தீட்சதரேசெவ்வந்தி
லிங்கரேயெங்கள்சொக்க லிங்கையரே-சங்கரா
சாரியரேயனந்த சாஸ்திரியாரேகைவிஸ்
தாரியரேகோவில் தானிகரே ஊருக்குள்
நியாயமில்லையோ நடுவில்லையோபார்ப்பாராம்
பேய்பிடித்தேயெனது பெண்பிள்ளையைக்-கோயிலுக்குள்
அஞ்சாறுமாதமா யாடிபாடித்திரியச்
சஞ்சாரங்கண்டேசோ சர்ப்பனையாப்பஞ்சமாப்
பாவியிந்தப்பார்ப்பான் பணமுங்கொடுத்தொரு
ரோகியிருந்தான் விடிந்தவுடன்போவானென்
றெண்ணினேனென்ன மருந்திட்டானோவென்னை
னண்ணினனோமதநூல் பாடமே-பெண்ணணங்கே
இந்தப்பெண்ணுபேரிட்டான் வட்டிவிற்கஞ்சிக்குமகன்
உப்பென்றுகேளா துபாயமிட்டான்-கைப்பிடிக்குக்
கொண்டானைப்போலக் குடிலமிட்டான்ஆண்டுபூண்டு
வண்டாலும்பேசாமற் கட்டிட்டான் ஒண்டொடிக்கு
வாடைப்பொடியிட்டான் வாய்பூட்டெனக்குமிட்டான்
கோடைச்சுழுத்துவைத்துக் கொள்ளையிட்டான்மாட்டோர்

பட்டிவைக்கிறேன்பல தொம்பைக்கூட்டிற்செம்பாகெல்
கட்டிவைக்கிறேன்பொற் கடாரங்கள்-எட்டேழு
தூக்கவைக்கிறேனென்றான் சோத்துக்குதூக்கவைத்தாட்
டோங்கவைத்தானம்பலத்தி லேற்றிவைத்தான்-வீங்கலிவன்
இங்துவந்தநாண்முதலா யேதுகொடுத்தான்றனக்குக்
குங்குமச்சம்பாவரிசி கொள்ளவென்றும்-பொங்கலுக்குப்
பாசிப்பயறென்றும் பாலென்றுநெய்யென்றும
தோசைக்குளுந்தென்றுஞ் சோமனென்றும்பூசலதும்
காணசவ்வாதென்று மலகுபாக்கென்றும்ரச
பாணவர்க்கமென்றும் பகலிரவா-ஏனோ
படுக்கைக்குவாழைப் பழமென்றுங்கேட்பான்
கொடுக்குங்குடன்போற் கொடுத்தேன் மடக்கொடியாள்
பொட்டழியகாதிற் பொகடியொருசோடழிய
ஒட்டழியத்தோற்றே முடமையெல்லாம்பட்டிமகன்
மோகினிமந்திர முழுதுமறிவான்மதன
னாகமங்களெல்லா மவதானம்நாகரீகம் அஅ

பொட்டறிவனுந்தண்டுப் பூச்சறிவானும்போகக்
கட்டறிவானுமொருநாள் கைவாளத்தட்டறையிற்
சோதித்தென்சினமயிர்த் தோலுரிக்கொம்புமவி
பூதிக்கிழியும் பொடியுமதில்யேதுக்
குருட்டிவைத்தானேசிலது வுண்டையுநான்கண்டேன்
இருட்டுப்புரட்டனென்று தேர்ந்தேனே அரைக்காசுத
தொண்டனிவனம்பலத்திற் சோதிப்பானென்றிங்கே
கொண்டுவருவானோ கொண்டுவரான்-வண்டனிவன்
மானேர்விழியணங்கு மாதவிடாயானக்கால்
தானேவிடவருவான் தண்ணீரை-மானிடமோ
அல்லும்பகலு மடைத்தக்கதவைத் திறவானே
மெல்லியரைச்சற்றும் வெளியில்விடான்-சொல்லுவதென்
பத்துவிசையாம் பகலுக்குமாத்திரிக்கும்
பத்துவிசைக்குமென்ற பாவைபோல்-உத்தரிக்க
ஆர்க்குமுடியுமிவ னானுமுன்பிறப்பில்
ஊர்க்குருவியோபெண் ணுடம்பிலேதீர்க்கபொண்ணு
கோவொதுங்கவிட்டா னூறுவயதுபயிர்க்கும்
பூவொதுங்கவிட்டான் பொருபொறென்று-பாவிமகன்
சொர்னங்கொடுப்பனென்று சொன்னதுவுண்டல்லாமல்
என்னகொடுத்தா னிதுவரைக்கும்-என்மகட்கு

மோகங்கொடுத்தான் மூளையறையாப்புக்கொடுத்தான்
மேகங்கொடுத்தான் மெலியவிட்டான்-ஆகம்
சிரங்கானாள்தம்பியிட்ட தீமருந்தால்மாது
குரங்கானாள்குத்திருத திருமல்கொண்டாள்-மருந்து
கொடுப்பவரார்புண்ணுக்குக் கூசாமறவிட்டப்
படுப்பவராரென்மகளைப் பாவிகெடுத்தானே
தேட்டுவர்றுதேருஞ் சிறுவயதிற்போக்கறுவான்
வீட்டிற்புகுந்தான் விடுதிபோல் காட்டமாய்க்
கூடவந்தங்கிருந்தக் குடுமித்தலைக்கண்
டாடவர்களெல்லா மகன்றுவிட்டார்-கோடாமன்
நித்திரைக்குப்பொன்னூறு நித்தங்கொடுத்துவந்த
முத்திரைபண்டாரமோ மோடிவைத்துமெத்தக்
கறுப்பாணன்மாலைகட்டிக் கன்னியப்பன்முற்றும்
வெறுப்பானான் மெய்க்காவலெவன்-சிறிக்கிமேல்
ஆசைவைத்தவாத்தியா ரையர்முறைதப்பிதமாய்
பாஷைவைத்துப்போனார் பாகையனார்-காசுபணம்
மாரியெனச்சொரிந்த மாரியப்பன்சண்டையிட்டு
விரிவளவிற்போனான் மீள்வானோதேபேறப்
பொன்னுடைமைபூட்டிவிட்ட பொன்னப்பனந்திசந்தி
சன்னைவிட்டுப்பார்த்தான் சலித்துவிட்டான்தன்னை அடும

வரத்துமில்லைத்தானும் வழங்கானோர்சிலை
தாச்சொன்னாலின்றைக்குச் சண்டைக்கொருப்பட்டான்
வைதானென்னையு மயிர்பிடித்தான்செய்யாதுஞ்
செய்தான்மகளைச் செவியிலே-கையால்
அடித்தான்விலக்கு மவரைமுழங்கையால்
இடித்தான்காத்தினா லென்னை இடுப்பொடிய
போட்டானங்கேமூர்ச்சை போனேனெழுந்திருந்தேன்
கேட்டார்சிரிக்கவல்லோ கீர்த்திவைத்தான்-றூட்டிசெய்த
தேனென்றுநீர்கேட்டா லென்னசொல்வாள்தாய்க்கிழவி
ஞூதெனப்பார்வாரிச் சொரிந்தபொருட்-சேகம்
கணக்குண்டோவென்பான் களிமெச்சவிந்தத்
துணிகளுண்ணியோகொடுப்பான் சொர்ணம்-பணக்கவளப்
மாந்தரீட்டுக்கட்டி வளர்த்தகடாக்கையிலே
பாந்தகதைமெய்யாப் பலித்ததே-சந்ததில்லை
தாயுமகளுமொரு தாமரையினீரானுப
பேயுமிரங்குமே பெண்ணென்றால்-தூயவரே

கண்டுகேடுப்பேசிக் கணக்குப்பார்த்துப்பொருளைத்
தெண்டித்துவாங்கியிந்தச் சேமனைநீகண்டிப்பாய்
மெட்டுக்கடக்க வெருட்டுமென்றுவென்ற
கட்டித்தலைப்பேயைத் தாணமர்ந்தப்பாட்டன்மார்
இல்லென்றருண்வாழ்க்கை நிர்ப்பாக்கியநீயும்
சொல்லென்றார்சொல்லத் தொடங்கினேன்-கல்லும்

தன்னறிவிப்புக் கூறல்.

கரையுமேமாயமாய் கள்ளிசொன்னவார்த்தைக்
குரையுமெதிர்வாக்குமுண்டோ-ஒருநாள்
நடந்தகதைகேளீர் நடுகாட்டுநீலி
தொடர்ந்தாளோர்செட்டிதனைச் சூதாய்-நடந்தவன்கைப்
பத்திரத்தாற்றப்பிப் பழையனூரம்பலத்தில்
மொய்த்திருந்தவேளாளர் முன்சென்றான்-சத்துருப்போல்
ஆலங்காடடுப்பே யதோவருகுதென்யனையாள்
கோலங்காட்டுப்பசட்டிக் கொண்டென்றாள்-நீலியென்னும்
கள்ளிமுலைப்பாலுங் கண்ணீருங்கால்கழுகக்
கள்ளியொன்றைப்பிள்ளையாக் கையேந்தி-மெள்ளவந்த
நாட்டிலேகண்டதுண்டோ நல்லோரேயென்னைநடுக்
காட்டிலேவிட்டார் கணவனார்-மீட்டுமவர்
இட்டிவந்தார்நான்பயந்து கெஞ்சிவந்தேன்வாருருவி
வெட்டிவந்தார்முன்னுள் விதிப்படியோ-முட்டமுட்டப்
பேயென்றுரென்னை யிந்தப் பிள்ளைகள்ளிக்கொயமென்றார்
தாயென்றாரில்லை தமரில்லை-தூயவரே
பேர்விட்டபான்முலைக்கீழ்ப் பிள்ளையைவிட்டாலது தான்
ஆர்விட்டப்போமென் றறியலாம்-பாருமென

விட்டாள்சபையிலது மெள்ளத்தவழ்ந்தமடி
தொட்டேறச்சேமுடி ஆனுக்கென்றான்-ஒட்டாரம்
பண்ணுகிறான்செட்டியென்றார் பார்த்தவரெல்லாமவளைக்
கண்ணூனநீலியென்றான் காணுக்கிப்-பெண்ணலது
சத்துருபேயாகிச் சதிசெய்தால்நாங்களுனக்
கித்தனைப்பெரும்பழிகா ணென்றுரைத்துப்-பத்திரத்தை
வாங்கிவணிகனையு மார்க்கமிட்டநீலியையும்
பாங்கியொருவீட்டிற் படுக்கவைத்து-தூங்குமெனப்
பூட்டிக்கதவடைத்துப் போயினர்பேய்மதியோர்
வாட்டமுற்றநீலிபழி வாச்சுதென்றே-ஊட்டி
கடித்தாள்வணிகன் பிடரிதனைக்கையால்
பிடித்தாளிடித்தா ளுதிரங்குடித்தாள்பின்

நீண்டாள்பிளந்தெறிந்தாள் நெஞ்சிற்குடர்மாலை
பூண்டாளெழுந்தாள் பொருள்வணிகன்-மாண்டதற்பின்
கண்டார்வழக்கையெந்தக் கற்பனையாற்சற்பனைகள்
விண்டாலும்பெண்வார்த்தை மெய்பாங்காண்-அண்டினர்க்கு
ருக்கிணைகொட்டி லடித்துபரிந்தூரிற்
கூக்குரலுமிட்டாற்பின் கூறுவக்கன்-வாய்கலினம்
பூண்டபரியெடுத்துப் போட்டதுமல்லாதுகுழி
தோண்டுதொன்றினிமேற் சொல்வானேன்-ஆண்டவரே ௮௮

அந்தணரேகாணிவன்மே லாசை-கொண்டேன் மோகமதாய்
இந்தனிதிவருமென் றெண்ணாமல்முந்தமுந்தக்
கூனிமருந்தையிடக் கூறுகொண்டாளன்றுமுதல்
மேனியொடுங்கினேன் மெய்மறந்தேன்-நானிவட்கு
முன்னாட்கடனைமுதலிடுவார் போற்கொடுத்த
பொன்னோபொற்பூந்துகிலோ பூஷணமோசொன்னசொல்
லத்தனைக்கும்வினை யழிந்ததெல்லாம்யான்கணக்கிட்
டெத்தனையென் றங்கட்கியப்புவேன்-சித்தசித்தம்
வல்லார்தனத்திசொந்த வைப்பென்றுமேரெனையும்
அல்லாமற்போக்குவரத் தாயிரம்பேர்-நல்லவன்போல்
உள்ளதெல்லாமெல்லா வுபாயமாவாங்கியெனைத்
தள்ளிவிடக்கள்ளி தனமெடுத்தாள்-உன்னுடையப்
பேசினாள்சும்மாப் புறப்பட்டுபோடாவென்
றேசினாள்நீகொடுத்த தென்னென்றாள் கூசாமல்
முந்திமடிபிடித்தாள் முந்தானையைக்கிழித்தாள்
சந்தியிலேபூணூல் தனையறுத்தாள்-இந்தநரைத்
தட்டானைவாதென் றலையிலொருகுட்டு
போட்டாளென்குட்டெல்லாம் போச்சையா-மோட்டு
வடுகனையென்மேல்விடுத்தாள் மற்றொருவனானால்
விடுவானோபுண்ணியவான் விட்டான்-இடுதூறுப் ௮௯

அந்தக்கிழவி யலக்கழிக்கப்பார்த்திருந்த
தெந்தக்குமரியே னென்றாளோ-சுந்தர
கலைவாணுதலணங்கே காதலென்மேலுண்டோ
இலையோயுனக்கென்றே னெட்டித்-தலைமேற்
சளக்கென்றடித்தாள் சதிகாரிவீட்டு
விளக்கிலடித்தாள்பின் வெள்ளி-முனைக்குமுன்
முந்தியேபொட்டு முக்காலுமாசையென்று
சந்திரவீரப்பன்முன்னே தாண்டினாள்-வந்தொருவன்
முத்தங்கொள்வாய்க்கு முன்னொருவன்தான்தொடுத்த
அந்தப்பலன்கொடுப்பார்க் காணையுண்டோ-வித்தகரே

பேணியிட்டுகெல்ல மெழுகுபிள்ளையார்போல
யானிருந்ததீர்க்க மறியீரோ-கூனியெனக்
கிட்டமருந்தாலு மிவன்கொடுத்தபுண்ணாலும்
ஒட்டியுலர்ந்த வுடலானேன்-மட்டைக்
குடுத்ததெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று
மறித்துமொருபொன்முடிப்பு வைத்தேன்-நிறத்தமுழு
மாணிக்கமொன்றுமணிமுடித்ததொருசிறங்கை
பேணிவைக்கச்சொல்லிவைத்தேபெண்ணிடத்தில்லணியைவைத்
தேறவிட்டுவாங்கியென்னையிக்கோலங்கொண்டசுழன்
மாறிவிட்டவாங்கி வழங்குவீர்-வேறெனக்குத் ௯௱

பின்னும்தாய்க்கிழவி அறிவிப்புக்கூறல்.

தஞ்சமில்லைநீங்களே தஞ்சமென்றேனக்கேரம்
கொஞ்சமுலைக்காரி துடிதுடிப்பாய்-வஞ்சத்
திருடனிவனுத்திச் செலவுக்கும்போக்கி
ஒருமுடிப்புவைத்ததுவுமுண்டோ-மருதங்
குடியிருக்குதேயழகர் கோயிலபதினெட்டாம்
படியிருக்குதேமுதலைப் பள்ளம்-கடுநியாயம்
சொல்லுதேசிங்கம் பிடாரிதுடியாமல்
கொல்லுமேதீர்த்துக் கொடுக்கிறோம் அல்லவென்றால்
என்னைக்கிடத்தி யெனதுமகள்தாண்டமகள்
தன்னைக்கிடத்திநான் தாண்டுகிறேன்-சொன்னதென்ன
தென்னிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்குப்
பிள்ளையோவென்றாள் பெரியோர்முன் கள்ளிசொல்லக்

சபையார் விசாரணைகூறல்.

கேட்டுநகைபுரிந்தார் கிட்டேயழைத்தென்னையவள்
கூட்டத்துக்குள்ளிருத்திக் கூறுவார்-வாட்டமுற்ற
மாதவரேவேசி மருந்திட்டாளென்றீரச்
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த

மருந்திட்டதறிந்தமைகூறல்.

முத்தனையாள்நேற்றிரவு மூலைக்குள்வைத்துநின்ற
குத்தியாக்குடித்துக் கூட்டமிட்டில்-வைத்தமுதல்
வெள்ளாட்டிகளுங்குடித்து வெறிபிடித்துத்தானும்
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித்
தலைக்கடையில்விட்டாளென் றன்னையொருத்தன்
விலக்கெருதுபோற்புகுந்தான்வீட்டில்மறக்கலமாய்த்
திண்ணைத்தலையிற் படுத்திருந்தேன் குண்டுணியாய்க்
கன்னியங்கேவந்தாள் கலைநெகிழ்ந்துஉண்ணும்

அரக்குவெறியா லவளென் மேல்வீழ்ந்து
குரங்குவெறிபோற் றிரிந்தும்-பரோருத்தியெனை
பண்ணுங் காலமெல்லாம் பண்ணினரைக்குமொரு
பெண்ணாசை பாரூற்பிடிக்குமே-அண்ணர்களைச்
சம்போகஞ்செய்வது போற் றன்றுலையாவதெல்லாம்
அப்பாகுங்கன்னியர்த் தாசாமக்வெப பிலே
காட்டெருந்துக் கடைமருக்குமுன்மருந் தங்
கூட்டியிட்டாலாசையொரு மோதைமேல்-காட்டப்வா
வெட்டுமோவென்று ஞடக்கையாகத்திருந்த
வட்டமுலையாள் செலல வகைவகைபாற்சிட்டரே
இந்தவிதம்கண்டறிந்தே னென்றுரைத்தே கேட்டுநல்ல
தன்னையெனச்சிரித்தார் மேலோர்கள் சிந்தைநொந்த

சபையார் தன்னைத்தேற்றினமைகூறல்.

பூசுரரே வேதப் புனிதரேயம்பலத்தில்
தாசியுடனேறத் தகாதுகாண்-வேசியொரு
செய்யமறைவேதியனைச் சென்னியிற்கல்லிட்டகதை
ஐயரேநீர்தா மறியீரோ-வையில்

திரவியத்தைவாங்கியுமைச் சீலனுடன்விட்ட
மரியாதைக்குண்டோ வழக்குப்பெரியாரே
வேதியராயுள்ளவர்கள் வேசியரைக்கண்டாக்கால்
காதவழியிலங்கக் காரியங்காண் ஓதுமறை
மந்திரநூல்வாயான் மதுவராகக்கொள்ள
எந்தவகைதணிவா யெண்ணினீர் சிந்தையாயில்
தீர்த்ததாசிக்குத் திரவியமெல்லாங்கொடுத்து
தீர்த்ததாசிக்கடனைத் தீர்த்துவிட்டீர்-சாத்தியமக
நாமறியாக்கூத்து நடந்துவிட்டிரும்மளவோ
மாமறையோர்க்கெல்லாம் வசையாச்சே-சேமநிதி
தன்னைப்பறித்தால் தாச்சொல்லுமென்றீரப்
பொன்னையினிக்கேட்கப் போருமோ-பொன்னைப்போற்
கூட்டியசெந்தேனெடுத்துக் கொண்டபேர்தம்மையவர்
காட்டியவித்தண்டிப்ப துண்டோகாண் குட்டரவம்
வாய்க்குளகப்பட்ட மண்டூகமும்யானை
வாய்க்குளகப்பட்ட வான் கரும்பும் தீக்குளனே
விட்டநறுநெய்யும் வெயின்முகத்திலேவெடிக்க
பட்டகமரில்விட்ட பாற்குழம்பும்-கட்டுபுகழ்
பாங்கினற்றேடாப்பரமனுந் தாசைப்பொருளும்
வாங்கினவிப்பொருளும்வாங்கலாம்-நாங்கள் சொன்ன

புத்திவழியின்றாற் பொருளறிந்தோர்நீர்சற்ற
வித்தையிலேசெம்பொன் விளையுமே-எத்தும் கூங0
பரத்தையருக்கிந்தநிலும் பதத்தனையாய்
வாத்துக்கயோகம வருங்காண்கருத்திலே
எண்ணியிடைய திருக்கழுர்க்கேகுமென்று
புண்ணியர்தாந்தன் மனையிற் போயினற்-பெண்ணணங்கை

தான்கலக்கித்தெளிந்தமைகூறல்.

பின்னடத்திசெல்லினவள் பின்னழகைப்பாரேனே
முன்னடத்திச்சென்றாள் முழுப்பாவிகண்ணீர்கட்
டாருங்குளத்திலனுபவித்துவற்றியபின்
ஏகுபறவைகளைபோ லேகினள்-மோகமுறும்
என்னைக்கிழவி யிடர்செயதென்னைப்பிரியாக்
கன்னிதனைப்பிரிவு கண்டாளே-இந்நாட்டில்
மாட்டுமதித்தாய்க்கிழவி மாயத்தையிற்கல்லைப்
போட்டுப்புறப்பட்டுபோவோமோ-நாட்டமுற்ற
ஊரெங்கேதோழரெங்கே யுற்றாரெங்கேமனைவி
யாரெங்கேயஷ்டவ தானியென்றப்-பேரெங்கே
நாணுவிதமுமெண்ணி நட்டாற்றுக்கோரையைப்போல்
ஆனேனெனக்கலக்க மாகினேன்-யானே

ஆலயஞ்சென்றுதெரிசித்தமைகூறல்.

எனைதேற்றிக்கொண்டுபோ யெங்கள்சொக்கலிங்கந்
தனைப்போற்றியென்கவலை சாற்றிஅனுக்கிரகம்
பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரம்பான்வலமாய்ச்
சுற்றிவரவே சுவாமியையும்-முற்றும் கூச0

வணங்கியபொற்கம்பந் தனக்குவடபால்
இணங்குந்திருவாசற் கிப்பால்-மணங்கமழ்பூ
மாலைநிறைத்தமணி வாசன்முன்முகப்புற்
சேலைநிறைந்த திருவிளக்கும்-பாலாவி
காந்திதரநிறைந்தக் கட்டளைக்குக்கட்டளையால்
வாய்ந்ததெல்லாஞ்சொர்ன மயமாகித்-தேய்ந்தமுனை
செட்டிலேவெற்சங்க நிதிக்காசனுபரணப்
பெட்டிதிறந்த பிரகாசம்போற்சட்டப்
புழுகுமணமும் பொலிந்தவரைக்கண்டு
தொழுதேனதிசயமுந் தோன்றப்-பழுதில்
மறையோன்மணியம் வரதையனென்போனவ்
வறைவாசலிலிருந்தா னையா-நெறிவுடையாம்

நாகமகூளேந்த்ரன்கட்டளைக்கண்டமைகூறல்.

ஆருபுரமீதென்றேனுடல்பயன்முதலத்
தாருவுமேழித்தடம்புயமால்-பாராளும்
யோகமராஜனென்பதூர்வாழ்பெரிய
நாகம்கூளேந்த்ரபாலன்-தோகையில்
மீனாட்சியம்மைக்குமிக்கசொக்கலிங்கருக்கும்
தானாட்சியானவுபசாரமோ-மேன்மையபி ௬௫0
ஷேகமதுமாலை சிறப்புமுதுதீபமுத
லாகநடப்பிக்குமறையென்றான்-மோகநமக்

இழந்தபொருளுக் கிரங்கினமைகூறல்.

இட்டணையுங்கன்னிக் கிரைத்ததெல்லாமிப்படி
கட்டளையாச்செய்துபலன் கண்டோமோ-சிட்டர்தொழும்
தங்கத்தினாலேசமைத்தோமோ-சங்கார்சொக்
கையர்மகிழ்ந்தேறவபிஷேகபண்டாரம்
செய்ததிருத்தேர்போலச் செய்தோமோ-வைபோகம்
பொற்பதுமமண்டபத்திற் பின்புறமுமுன்புறமும்
பொற்கழுகொண்டழுத்திப் போட்டோமோ-மற்றுமெங்கள்
மாலழகருக்கு வயிரததான்மின்னெறித்தாற்
போலழகாடங்கிபண்ணிப் பூட்டினமோ-சாலையறம்
செய்தோமோகோதானஞ் செய்தோமோ-பூதானம்
செய்தோமோசத்திரங்கள் செய்தோமோ-தய்யவிதி
ஆரிடத்தில்வாங்கி யரும்பலனைத்தேடுவோம்
பேர்படைத்தபெஞ்லை ப்ரதாபனென்ப-தூர்படைத்த

அப்பிரபுவிடத்துச்சொல்லத்துணிந்தமைகூறல்.

ஐயன்பெரியநாகைய னிடஞ்செல்லோமோ
செய்யுமறைவேதியரேசெப்புமென்றேன்-எய்துதிருப்
பாற்கடலுக்கேகினர் பால்குடியரோவிதற்கு
மேற்புத்தியுங்கேட்க வேணுமோகூற்கொண்டு ௬௬0
பெய்யுமழைக்கு ணையாதபெருமவன்
கையிலேற்காதவருங் காணேனன்-ஐயமின்றிப்
போமெனவெண்ணீறுதந்துபூசிவிட்டார்சந்தனத்தை
யாமெனச்சொக்கேசரடிபணிந்து-மாமேவு
கூடலழகாமதனகோபாலர்பூந்துளவ
வேடலருந்தார்வீரராகவமால்-மாடேறும்

நல்லாண்டவர்கார்க்கு மிம்மையிலேநன்மைதரு
மல்லாண்டவர்பாதம்வாழ்த்தியே-செல்ல
மடங்கைதயங்கையற்கண்வாசலற்றச்சாலை
கடந்துமருவீதிகடந்து கடந்துவரப்

மதுரையினின்றுஞ் சென்றமைகூறல்.

பின்னிழுக்குமோர்காலை பெண்ணாசைமாயினம்
பின்னிழுக்குமோகாலை முன்றுசரப்பின்னே
திரும்புவதுமீள்வதுமாய்ச் சீமாட்டியரசைக்
கரும்பைநினைத்தேன்கருத்தில் விரும்புமவள்
குன்றிருக்குமென்முலைமேற் கூடிக்கலந்தசுகம்
இன்றொருத்தன்பங்காயிருக்குமோ-மன்றலர்ந்தார்ச்
சுற்றுடனான்படுத்த தூங்குமஞ்சமீதிலொரு
பற்றுப்பயலும் படுப்பானோ-மற்றுமந்தச்
சந்தியிலேமாமியிட்ட சண்டையிலேவந்தொரு
தொந்திவடுகன் சுகிப்பானோ-முந்திவிளை
யாடியனுராகம்பாடியுறவாடினன்
கூடியதெல்லாநினைத்துக் கொள்வாளோ-மேடையின்மேற்
கின்னமுலைமேற்பதிப்பித்தக் கிள்ளைபார்த்தென்னையுஞ்சற்
றெண்ணிநெடுமூச் செறிவாளோ-எண்ணிற்
படாதபாடித்தனையும் பட்டேனென்பாவம்
இடாதோபிரமனுர்க் கென்றே-தடாமல்
வடக்குமுகக்கோட்டை வாசல்கடுக்கட்டு
முடக்கில்வருபோதெனக்கு முன்னே அடக்கமுள்ள

ஞானியாரைமறுபடியும் கண்டமைகூறல்.

மானுபாஞானி யையன்மதுரைக்கன்
றேனேவந்தானென் னெதிராக-நானவனைக்
காணுமளவிற் களவாண்டவன்போலென்
சாணுடம்புங்குன்றியொரு சாணானேன்-நாணமாய்
மாமிதனைக்கண்ட மருமகள்போலானேனைச்
சாமியெனையன்பாய்த் தழுவினால்-நாமறிய
ஆனைபோலேயிருந்தி ரையரேயுமுடப்பு
பூனைபோலேயொடுங்கி போவானேன்-ஆனவிது
என்னவகையென்றான் மற்றேதுவகைநீர்முதலே
சொன்னவகைகேளாத் தோஷவகை-முன்னுமது
கையைவிட்டுவேசிமகள் கால்பிடிக்கச்சென்றேனென்
மையையிட்டகண்ணிகரு மாலானேன் -பையவுண்டைக்
கூட்டியிட்டால்கைப்பொருளைக் கொள்ளையிட்டாள்கைக்குரங்காய்
ஆட்டியிட்டாணிக்கோல மாக்கிவிட்டாள்-கேட்டார்

ஞானியார் தேற்றினமைகூறல்.

நகைப்பாவென்றே அதற்கு நாணமெனையார்க்கும்
வகைதப்பாமோசம்வாராதோ-பகுத்தறிவாம்
வண்டாடுஞ்செங்காந்தள்வாடையாலேவசைக்கு
கொண்டாடுவோர்கைக்குணங்காட்டக் கண்டிர்பின்
இந்திரன்மெய்யோனிக்கணீரைஞ்நூறானதுவும்
அந்தணனார்சென்னியொன் றற்றதுவுமசுந்தோப
சுந்தரர்மடிந்ததுவுஞ் சுக்ரீவனல்வாலி
மரமானதுமிலங்கை வாள்வேந்தன்சிந்து
சிரமானதுவச்ர தேகத்துரம்படைத்த
கீசகனார்மாண்டதுவுங்கேட்டறிலீரோபெண்
ணாசையாலென்பதறியீரோ-பூசுரரே
கைப்பொருள்போச்சென்று கவலையேன்கல்வியொன்றால்
மெய்ப்பொருளாம்பாவலர்க்கு வேளாண்மை-இப்புவியில்
மன்னனிற்கற்றோனே சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்றேசமல்லாற் சிறப்பில்லைகற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பென்று-நன்றியுற
அவ்வைசொன்னநீதியறியீரோ-நீரினிமேல்
இவ்விடம்விட்டுங்களூர்க்கேகுமென்று-தெய்வ ௧௧௦
மறைவல்லோர்தன்னை வழிவிடுத்துப்பார்த்துத்
தறுகின்றனென்மேற்றயவால்-நெறியுடனே

ஒன்பதூர்நோக்கிச்சென்றமைகூறல்.

ஐம்பதூர்க்கேசியலேக்குபலனேதென்றே
ஒன்பதூர்த்தேக வொருமீநகேதன்-முன்புகரும்

நற்சகுனங்கண்டமைகூறல்.

காகமிடத்திருந்து கைக்குவலப்புறத்தில்
ஏகக்கருடனிடமாக-யோகபலம்

ஏடகங்கண்டமைகூறல்.

இன்றுவந்ததாகுகமக் கென்றுவந்தேனேடகத்திற்
சென்றுவந்தேயந்தச் சிவனுரை-அன்றுநெரி
சிக்கமலரும் நறுங்கொன்றைப்பூவிதழுந்
தியாகமெனப்பொன்னுமுத்துஞ் சிந்திற்பத்-தோகைவிரிச்
சித்தேனென்பூர்வ சென்மதோஷங்களெல்லாம்
இக்கேதகங்கண்டவதனவழியேன்-அத்தலத்தின்
வெம்புகரும்பாம்பு வெண்மணலாநீறுமாய்
தாம்புவுடுசீரயிர்கந்தானுமாம்கேப்பம்
வறியேன்மருந்தின்பயக்கமுநோயுந்தீர்ந்
தறிவாளனுக்கிவிட்டதவ்வூர்-நெறியுடனே

அற்றையநாள் தங்கிபருணைகபத்தெழுந்து
மற்றைநாண்மேற்குவழிகொண்டேன்-வெற்றிபுரி ௯
கோடுகொண்டமால்யானைக் கூனேந்திரனென்பதுபேர்
நாடுகண்டேனெங்கவலைநானேனாகடவான்

பின்புகாட்டுவளங்கண்டமைகூறல்.

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகம்வாழைகளும்
கட்டிற்பூங்காவனமாகக்காண்பிக்க-விட்ட
வருக்கைபலாக்கனியைமாறாயிருகைக்கொண்
டிருக்குவதமத்தளக்கோட்டென்ன-உருக்குமிசை
வண்டுகெத்திகூடவரிக்குயில்கள் பண்பாடக்
கண்டுகிளிகள் கவிபாடத்தண்டாத
மன்றலந்தாரல்லிமலர் வாவடகாற்றலடிபட்
டொன்றொடொன்றுதாளம்போ லொத்திசைப்ப-நின்றலகில்
நீலவன்னத்தோகைநெடுஞ்சிறகைமேல்விரித்துக்
கோலவனிதையர்போற்கூத்தாடச் சோலைக்குள்
ஆங்குநிபாயமலரோடைவிணைவாள்
வாங்கியவீச்சு வளங்காட்டபூங்காவில்
வந்துநுழைந்துசெல்லும் வாலாவிகூத்துக்குப்
பந்தப்பிடிக்கும் படிசிறப்புமுந்த
மூகைத்திரக்குமுலைமலர் மொய்த்திருந்துபார்ப்போர்
நகைத்திருக்குப்பாவனையாய் நண்ணமிகுந்தபொரி
தாமென்னுமஞ்சைபெதிரணம்பறந்துவந்து
போகின்றவெண்சேர்பாற்படிய-நிலையச் ௧௰

சாதிக்கதிர்குலையுந் தாமரையுமந்தநறம்
சோலைக்குணமன்னர்சூழுஞ் சூழ்ந்தநொக்குஞ்-சோலைவளம்
ஏதென்றுசொல்லுவே னிருதோறும்பூரித்தேன்
வேதன்றொழுங்கோயில் மேட்டிமேல-சிதையுடன்

திம்மராசபரைக்கண்டு தெரிசித்தமைகூறல்.

மாதவனைக்கண்டேனென் வல்வினையெல்லாமுடனே
ஆதவனைக்கண்டபனி யாகினேன்பாதம்
தொழுதியமராயர் துதித்துனைப்பாடாமல்
பழுதிலேலேவசையரைப் பன்னி-முழுவதுமுன்
மீனவடிவமைந்த மின்னார்கா ணைநுநீ
யானசிங்கருபமிடை யாமென்றும்-மென்மையுடன்
மைக்கிசைந்தருபத்தைமங்கையர்கூந்தலென்றும்
கைக்கிசைந்தசங்கைக் கழுத்தென்றும்-திக்கனைத்தும்

தந்திப்புவனமெல்லாந் தந்தவனைத்தந்தகமல
குக்கிதிருமுகத்துக் காப்பெற்றுச்-சந்ததமும்
வேயடுத்தவினிசையை மிகநேர்வசனமென்று
நீபடிக்கும்பாவைநீகம்பமென்றுவாய்ப்பிதற்றிப்
பாடினேனிந்தப்பலன்கண்டேன்சிந்தைமலர்
சூடினேன்பாதந்தொழுதெழுந்தேன்-ஆடி

பதியிற்சிறப்புக்கண்டமைகூறல்.

அளகாபுரிக்குமமராபதிக்கும்
வளமானவப்புரிக்கு வந்தேன்-பளபளபளனும்
செம்பொன்னெடுமதிலுந் தேரோடும்வீதிகளும்
கும்பமுடிநிறைந்த கோபுரமும்-அம்பரத்தில்
ஆற்றுநீரள்ளி யருக்கனுடல்குளிரத்
தூற்றியபொன்மாடத்துகிற்கொடியும்-நீற்றொளிசேர்
தன்னிறத்தைப்பொன்னிலத்துநாட்டிக்கிந்நிலத்துப்
பன்னிறத்தைப்பெற்றபரிசைகளும்-இன்னவழ
கத்தனையுங்கண்டு மகிழ்ந்தையன்கோயிலையும்
கர்த்தனையுங்கண்டு கமலத்தாள்-பத்தியுடன்

அரண்மனைக்கொண்டு சென்றமைகூறல்.

சேவித்தேதென்கோயிலுக்குத்தென்புறத்திற்கற்பகப்பூ
நீண்டதேறூறுநெடுமதிலு-மேவுமுகம
இட்டமணிமபொற்குடங்களட்டுவகைச்செந்திருவின்
வட்டமுலைபோலிலங்குமாளிகையும்-கொட்டிக்
குழமுங்கின்றதக்குரவுக்கால்டேனாவென
றமுழங்கின்றதாபோனிலருட்டம்-தழைக்கின்ற
சிவகாரமென்னைச் செயலாலுங்கூடிதுவே
எங்கோனரண்மனையென்றெய்தினேன்-தங்கப்
படையாற்றிருடாமயத்தாற்கொடையால்
அடையாதலாசலுக்கு ளம்மேனை-திடவிகட
காந்ததமிழ்ச்சிறுக்கட் காயனைநீற்பவதா
ஏந்துசெபமைகண்டே இவ்வெனறாமை-சேர்ந்தான்
வெல்லவிட்டபூண்டிலைபாண மைனமூலைக்கப்வெலமனைதைச்
செலலவிடேமெனள தருபிள்னைசெலவமுதல்
வாசலுக்குண்மனைவர்வருவாருமபோவாரும்
ஜேஜேயனுஞ்சந்தடிக்குட்சிகந்தேனைவிடுகின்ற
பட்டைக்கயபுக்குப்பயந்தெனையப்பினபறதிவந்த
மொட்டைக்கவியனழுகிருடானகட்டப்போய்

அத்திலேன்சொல்லவெனை யாரென்றுரைப்பாளாம்
வித்துவானென் றுசொன்னேன் விட்டுவிட்டார்பொய்த்தயணிப்

கொலுசிறப்புக்கண்டமைகூறல்.

பத்துவிலாசப்பவனச்சாற் போதிகைப்பூ
வைத்தநவரதமணி மண்டபத்தில்-இதகிரி
வானலோகம்பறக்கு மாலபெரியநாகேந்த்ர
கூளபூபாலன்கொலுவாகத்-தோளிற்
செயமாதுக்கூடத் திங்கண்முகமேபங்
கயமாதுலவக் கருணை காட்டக்-கையிலேந்து
நெய்வடித்தவாள்செவிக்கு நேராகநின்றேன்காண்
எவ்விடத்தையாசொல் லெனக்கேட்பச்-செவ்வியபூஞ்
சந்த்ரகாவித் தலைப்பாகைமேற்கவிகை
சந்த்ரோதயகாந்தி தான்கேட்ட-அந்நேரம்
திக்கனைத்துஞ்சுற்றச் சிறகடிகொள்-கீர்த்தியைப்போல்
மீக்கிரட்டைப்பாவாமை வீசிநிற்கச்-சொக்கர்

அவிசொளிரத்னங்கி யடுத்திருபால்வீசும்
தவரியுபயமிறக் காட்டக்கவலைபடும்
சொற்காட்டமென்னூர் தொழுதவந்துகொஞ்சப்
பற்காட்டுஞ்சென்னி பதித்தமணி-முற்காட்டு
சாமித்துரோகரைப்போற் றண்டைமுகப்பில்வெ றிச்
சோமத்தலைபோலச் சோதிவிட-விமான
தீரதுரைமக்கள் செயமந்திரிமாரும்
வீரதளகர்த்தர்களும் வேந்தர்களும் பார்மதிக்கும்
ஸ்தானபதிகளு மாசண்டயோகிகளும்
சர்ராகனுதிரிந்த காவலரும்-கோன்முறைமைக்
கிந்தவகைக்கிந்தவகை யின்பம் தருவதென்ன
வந்துபராசர் மனுக்கேட்பச்-செந்திருவாழ்
அப்பவதனசந்த்ர சோபைநாதெள்ளமுதே
தையல்லார்செங்கட் சகோரமுன்னைக்கைகுவித்து
வாரிட்டராணு வரிசையாய்நிற்கவெதிர்
காரிட்டயானைநின்று காதாட்டத்-தாரிட்டும்
பொன்னின்முகப்பூண்டு பூட்டிநிறைத்தடல்வி
வன்னப்பரிசனைத்து வாவிநிற்க-எந்நேரம்
கடுஞ்சனஞூழியக் காரர்கொடிசெய்த
தேடுங்கனகச ருவைக்காரர்-சோடிட்டுத்

தந்தாமாய்க்காவிலிட்ட தண்டைகளுங்கேடயமும்
கத்திரிபாய்வந்துநின்று கைகுவித்துச்சித்தமவரச்
சிங்களத்தைவிட்டுச் சிறைபிடிக்கவோநாங்கள்
வங்களத்திலேகலகம் வைக்கவோ-பலயில்லா

வல்லத்துகோட்டையைப்போல் வாங்கவோவாங்கவோ
தொல்லந்ததகொள்ளையிட்டு கொள்ளலாமோ-மெல்லப்போ
சொல்லைபாவென்னத் துடிபடியங்காரர்பணம்
சொல்லுமவரவுஞ் செவிக்கேற்ற-செல்லுமிதி
ஆயக்கமுஞ்செலவு மாதாயமுங்கழிவும்
வாயிற்கணக்கர்வந்து வாசிக்கத்-தேயத்துக்
கோவோலைவாசகத்தை கூறுவாறுபெழுதி
ஏவோலைகொப்ப மிடச்சொல்லத்-தாவித்
தகருந்தகருந் தலையுந்தலையுந்
தகருந்தகருமெனத் தாக்காவிகடகட
மல்லராய்முற்பகையு மல்லாய்க்கட்டிவிழு
மல்லராய்கைகுவித்து வாங்கிநிற்-செல்லக்
குறும்புள்ளாய்கைக் குறும்புள்ளாக்கோபக்
குறும்புள்ளாய்ப்பாய்ந்து குதிகொளப்-பறங்கிகளும்
சோனகருந்தந்த துரிதவாகனிது
சீனர்வரவிட்ட சிவிகையிது-யானைகட்டி

மீண்டுகொண்டைமைசூர்மேல் வேட்டைபோம்நம்முடைய
தண்டுகொண்டுவந்த தனங்களிது-மண்டலிகர்
இட்டதிரைகளிதுபாராக்கென்றுசொல்லக்
கட்டியர்கொண்டாடக் கனபேரிகொட்டரண
மல்லாரிகொட்டக் கோபிலமால்கோயிலா
ரெல்லாருமோர்பாலி லினிதிருப்ப-நல்லமிர்த
போசனங்கள பூபாலஞ்சத்திரத்து
மாசனமுமன்று- மங்கலத்துபாசனமும்
அக்கலக்குண்டு மாசனமுமாறாரம்
அத்தலததில்லைதிகநா லந்தணரும்வித்வசெனர்
பட்சமுமுமெங்காண பலிசப்பலன்களுமென
றசுஷபமாமென றசுஷைத வழங்க-ரட்சகனும்
கோரசிங்கருபவுக்ர கோதண்டபாணியைப்போல்
வீரசிகொதணதத்ல் வீறறிருந்தானசூரியன்முன்
பகையமபோலனை பாபரெனச்சனறெநதரே
செங்கைதலையேந்திச் செயமென்றேன-இங்கே
இருமொனறென்னைய விடைகாட்டபபெறறேன்
அருகிலிருநதேனமகிழ்ச்சி யானேன்-கருணைபுரிந்
தெனமேல்விழிவைததா னெங்கோன குறிப்பறிந்து
பொன்மேவும்பெஞ்சை புரந்தார்மன்னு

இளங்காவல்லாமிலைக்கோட்டைராயா
அளங்காவாளுக்கபிமா-னகைமுகப்பித்
தாபாகலிகோபாசதுராவிருதுபண்டு
பாபாவலக்கவசம்பாக்யகுலா தீபா
சமுகப்ரமுகலளிதசுகுதகுணாளயநிய
சமுகாளைமுக்கமலதளநயனா-அமிர்தரச
மதுரவித்வவசனமிர்தம்மெழுதபுயசைல
சதுரதடகடகரடசாகரிஉதயசெரு
விதரடணபரிகுலவிகடமிமெகுடமுடி
அதிரவடிவருடுசண்டலபய-அதுலகுல
சந்திரஜிந்துரசந்தனகுங்கும
மந்திரகொங்கைமடந்தையர்-சுந்தர
கல்விப்பெருங்கடலேகற்பகக்கன்றேசாலச்
செல்விக்குவாய்த்ததிரவியமேவெல்லுமதக்
கூன்கோட்டியானைக்குருக்காரெனுங்காட்டு
மான்தோட்டஞ்சாடும்வரிப்புலியேமீன்கூட்டம்
பாஇக்குறவணிந்த பன்றிமலைச்சாரலிலே
ஆஇக்கஞ்செய்திருக்கு மாவீரா ஓதுபகை
வீரமண்டலீகரெனும் வேழங்களைவிழுங்கும்
பாரகண்டபேரகண்டபட்சியே-சேரவாய்
அண்டிப்பொருவோ ரரிகுலத்தைவாளுகிராக்
தண்டிற்கிழக்குஞ் சாபமே திண்டிறல்சேர்
போகேந்த்ரசக்கபுவனேந்த்ராராஜாதி
ராசேந்த்ரதீனசன ரட்சகா-வீசுதரை
ஆற்றிலேநாலு மறுதினமுப்பொன்னாலும்
ஊற்றிலேயாரு முடையானே-ஏற்றமுள்ள
பத்தூரல்வெண்றுப் படைக்குந்தலையூராம்
நத்தூருமொன்பதூர் நாயகனே-மொய்த்தகடல்
ஒப்பத்திரண்டுதள முள்ளசதுருடியங்கள்
முப்பத்திரண்டுபெற்ற மொய்ம்பனே-இப்புவியில்
அண்டலரைவெல்லு மறுபத்தைநாலுமன்னர்
கண்டசெய்தூரக்காண கங்கணனே-மீண்டுகொண்டு
சண்டைக்குடில்லித் தளம்வந்துதாளலும்
கண்டுமலையேறாத கண்டனே-தண்டஜப
தண்டனேகாரிய வுத்தண்டனேசூதாலே
தண்டனேவீரியகோதண்டனே-தண்டவலத்
தாரனேசற்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு
தாரனேயற்றவர்க் காதாரனே-ஆமுத

சோமனேயன்னசத்ரசோமனேகற்பகப்பூங்
காமனேவிற்கரும்புக்காமனேநாமகள்சேர் ௧௮௰

பெஞ்சைநககர்சிந்தமணபேறேசாற்கால
மஞ்சைகிழக்கியாகவெள்ளமே-அஞ்சித்
தொழுதங்கவேந்தருக்குதங்குசிட்டொப்பம்
எழுதும்பெரியநா கேந்தராளிமேபார்
காகங்கள்விரிந்தேறக் கண்டதுவாய்போல
இரங்கும்பெரியநா கேந்தரா-வரங்கள்
செருக்குமதரூபம்போற் சிங்காதனத்தில்
இருக்கும்பெரியநாகேந்தரா-புருக்கும்
மழைக்கும்பகழும் பதயாலேவூரிட்
டழைக்கும்பெரியநாகையா-களைத்தபுகழ்க்
கூளமகீபன்குமரர் துரைச்சிந்தாமணும்
வாளபயமேசாதரவசீகரனே நீள்சகல

தன்வித்தை அரங்கேற்றினமைகூறல்.

சம்பனுவென்றுதமிழ் பாடினேன்தமிழிற்
கம்பனுமென்றூர்கவிராசர்-சொப்புபெறக்
கட்டாசுறாறகவிசொல்லனேனெங்கேயென்
அஷ்டாவதானமரங்கேற்றினேன்-அஷ்டாங்க
யோதக்கூரவித்துகிலோருளமகிழ்ந்துயிர்க
பாதமெனச்சொல்லறைப்பண்ணினேனை தியாகநிதி
என்னும்பெரியநாகேந்த்ரன்களங்க
மன்னன்திருவாய் மலர்ந்தருளி-என்னைக்
கவிச்சக்ரவர்த்தியென்றுங் காவலாநீயே
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச் செவிக்குநல்ல

வெகுமதி செய்தமைகூறல்.

முத்துக்கடுக்கனுடமுன்னைதனக்கிணங்கும்
அஸ்தகடகம்ரத்நஆரமணி-கொத்துச்
சரப்பளிதுப்பிப்பதக்கஞ் சாலுவைபொற்காந்தி
பரப்பிவிடுபொற்சரிகைப் பாகை-தரித்தருள்பீ
தம்பலவாளிகதாள் தருப்போலவெனக்கங்
காம்பரிசிலீபமற்று முன்னே-மேம்படிபொ
திட்டபுகழ்க்கல்லூர்வாழ் திப்பன்வேளான்தலைக்குச்
சூட்டவொருமுத்துத் துராவிந்தான்றாஷ்டிகோத்
தண்டெனுக்கூளேந்தரன் தயமியாருசிந்தமனோர்
கண்டசாமீந்தான் கழுத்துக்குகொண்டலெனும
முத்தாயன்கொடுத்தானே முன்னவசிகமாக்கினான்
பத்துவராகன்பெறவோர்பாத்திரன்-சித்தசனும்

ரங்கப்பன்கொலுசுநல்கினான்மோதிரமென்
செங்கைவிரலுக்கணிந்தானே சிந்தமவேள்-தங்கவனை
ராசகோபாலையனல்கினான் சீர்கொள்முத்துப்
போசனொருமுத்துவடம்பூட்டினனே-பேசுபுகழ்ச்
சாந்தபூமன்கொடுத்தானே சாலுவைகன்னாகரநம்
ஈந்தானே கொடிநாகனென்கையில்-வாய்ந்தபுகழ் ௱௬0

நல்லவனாகச்சுநடைப்பரியீந்தானுலகம்
சொல்லும்பணிக்காயன்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத்
தையலங்கியொன்றெனக்குத் தந்தான்பெரியதம்பி
ஐய்யவெள்ளிக்குண்டுசொக்காய்தந்தான்-பொய்யுரையாக்
கூளக்கணக்கணமணிக் குண்டலந்தானிரண்டு
தோளிற்றானுக்களவாய்த்தூக்கவே-வேணைக்
குதவியதம்பான்கொடுத்தானென்பதுபொன்பட்டுச்
சதுரன்கைலாசதயாளு-புதுவயிரத்
தணடோட்டிதந்தானே சவாதும்பணிதந்தான்
கொண்டசொக்கலிங்கன் கொடுத்தானே-முண்டாசு
சட்டமிட்டுசொக்கலிங்கன்தந்தான்கணையாழி
கட்டழகன்பாசிபந்துகட்டினான் பட்டை
யரைஞாண்தந்தார்பொன்னரசட்டைதந்தான்
வரிசையாம்ராம மகிபன்முருகு முத்து
சின்னானுதவினான் தீரன்வடகூவன்
பொன்னால்விருதுதண்டைபூட்டினான்மின்னெறிக்குந்
தாலாத்திராமனன்று தந்தானே திருமலையான்
நேயத்தாற்போற்பூசிகிசாறுதந்தானே தூயதுணைக்
காமநீந்தானீற்கறவைவைக்குதண்டையிட்ட
சோமநீந்தானரைக்குச் சோபாகச் சோமனெனும் ௱௭௰

பசலைசிவப்புத்துப் பட்டிதந்தான்மாடன்
பாலுக்குக்காராம் பசுதந்தானே மால்குழைத்து
வேலனெனக்கிரண்டு வெள்ளையெருதாய்மேகம்
போலக்கொடுத்தோட்டிப் போவென்றான்சிலிபு
பாலன்கொடுத்தானோர் பச்சைவடஞ்சோடங்கி
நாளுமடிப்புரொக்க நல்கினான் சீலனெனும்
நல்லமதன்கொடுத்தா னல்லகுதிரைமறி
கல்விதெசிக்கனென் கண்குளிரக் கொல்லத்துப்
பச்சைசக்கபாய்தந்தான்பாரியொத்தசமியங்கே
மெச்சியெனக்கிரண்டுமேஜிதந்தான்உச்சிதமாக்
கூதலுக்குப்போர்வைதந்தானே கொண்டபூபனுலக
நாதன்சகலாத்துநல்கினான்-மாதங்கக்

கட்டிக்கொடுத்தனனைக்கண்டவன்குருவா
ரெட்டிகொடுத்தானதற்குரெட்டிப்பு-கட்டிவிட்டு
நாழிமுத்தைமுத்தையவேனல்கவாதப்பனொரு
தாழிவிரலைப்போட்டான் சமுத்திவ்வாழியென
ரங்கையனீந்தானங்கே ரத்னகண்டிராமையனு
துங்கன்கொடுத்தான்பொன்தொண்ணூறு-திங்கண்முக
வீரப்பெருமாள் விரலுக்குவச்சிரக்கல்
சேருற்றபொன்மோதிரந்தந்தான்-கோர தாகூ௰
அனுமாத்துவசரருங்கருடபாலர்
கனவிருதுசிங்கடாற்காரர்-எனவாழு
னல்லாருஞ்செம்பொனிறைந்தாரையானனஞ்சூழ்
நல்லாசனம்பெரிய நாகேந்த்ரன்-செல்வத்
துரையெனக்கங்கட்டான் சொர்ணாபிஷேகம்
கரையெனத்தந்தானே-மதமா-தளரக்
கவிகைதந்தான்வெள்ளைக் கரிதந்தான்-செம்பொற்
சிவிகைதந்தான்காந்திசிறந்த-ரவிபோல
இருட்டகற்று தீவர்த்தியுமீய்ந்தான்மதிபோற்
சுருட்டிதந்தான்தந்தான் றுவசம்-பெருத்தசில
னூர்தந்தானும்பளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க
ஏர்தந்தான்வாவுக்கிடந்தந்தான்-ஆர்லந்தார்
இந்தத்தியாகமிவனைப்போல்வாரியா
விந்தத்தியாகவந்தமெல்லியலே-இந்தவிதம்

விறலியைத்தூதுவிடுத்தமை கூறியது.

என்செய்தியாதிதொடர்ந்தெல்லாமுனக்குரைத்தேன்
பெண்செய்தவமும்மூர்க்குபோயினிமின்னசெய்த
சிற்றிடையாகியவென்தேவியாரைக்கண்டு
நற்றிறஞ்சேர்வீணையைப்பாடி-மற்றவளுக்
கென்குறையுமெள்ளவியம்பியெதிர்சொல்லுமந்தப்
பொன்குறையுங்கேட்டேல்போக்கியோ-நன்குறுமென் தாச௰
ஆசைமனையாட்டிதனக்கையங்காரின்னுமொரு
வேசைமனக்கேகுவரோவிட்டெனவா லேசனையும்
கொள்ளாமலென்பதங்கூறிமுன்னைக்குற்றநினைந்
தெள்ளாமற்கற்பினியல்போதி உள்ளாளப்
பண்பாடியட்க மாபாரணம்படச்செய்து
நண்பாடியென்னரவை நான்கேட்டுக்கண்பார்க்க
ஓசையாமுன்போலுறவாக்கச்செல்லவழி
தோகைவிரலீ-தூது

ஆ. கண்ணிகள்—தாச௰.

விறலிவிடுதூது முற்றிற்று,